**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | OS. No. | | **26/2015** |
| | | P/W's | : | **PW1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | சுந்தரம் பூசாரி | CASTE | : | |
| S/O | கருப்பையா பூசாரி | RELIGION | : | இந்து |
| VILLAGE | சோழவந்தான் | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | **71** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 01.12.2025**

<u>7 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான்தான் வழக்கறிஞரிடம் சொன்னேன். கோயில் இடம் கோவிலுக்கு வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு கோயில் இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் வருகிறது என்றால் சரிதான். நான் கோவில் பரம்பரை அறங்காவலர் என்ற முறையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு கோவிலுக்கு மொத்தம் 4 பேர் பரம்பரை அறங்காவலர்களாக உள்ளோம். நான் வழக்கு கோவிலின் அறங்காவலர் என்பதைக்காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேன்.

2. மற்ற 3 அறங்காவலரிடம் நான் இவ்வாறு வழக்கு தாக்கல் செய்வதாக ஆவணம் ஏற்படுத்தவில்லை, வாய்மொழியில்தான் சொன்னேன். நான் கோவிலின் அறங்காவலர் கிடையாது என்றாலும் பூசாரி மட்டும்தான் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் கோவிலின் பூசாரி என்பதற்கான அடையாளஅட்டை என்றாலும் அறங்காவலர் அடையாள அட்டை கிடையாது என்றாலும் சரியல்ல. 2ம் பிரதிவாதி மதுரை சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண் 537/1977ன் தீர்ப்பின்படிதான் வழக்குச்சொத்தை 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் எனக்குத்தெரியாது.

3. வழக்குச்சொத்தின் வருவாய் ஆவணங்களான வா.சா.ஆ.2 புலவரைபடம் ஆரம்பத்திலிருந்து எந்த மாற்றமும் செய்யாமல் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3

கிரைய ஆவணத்தில் நானோ எனது மூதாதையர்களோ தரப்பினர்களாக இல்லாததததால் அதை நான் தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 கிரைய ஆவணத்தில் சொத்தின் அளவீடு மட்டும்தான் உள்ளது என்றாலும் நான்குமால் குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி பத்திரத்தின்படி கோவிலின் பிரகாரத்திற்கு மேற்குப்பக்கம் மஸ்தான் சாகிபு கிரைய இடம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

4. வா.சா.ஆ.6, 7 அசல் வழக்கு எண் 175/1954 ஐ அடைக்கலம் என்பவர் எனது அப்பா பெரியப்பா, பங்காளிகள் நாராயணசாமி பூசாரி, தர்மராஜன், கருப்பையா பூசாரி ஆகியோர்களுக்கு எதிராக தாக்கல் செய்தார். இந்த வழக்கின் பிரதிவாதிகள் மேற்படி 1954 வழக்கில் பிரதிவாதிகளாக இருந்தார்கள் என்றால் சரிதான். வழக்குச்சொத்தின் அளவீடு வடக்குப்பக்கம் 130 அடி, தெற்குப்பக்கம் கோயிலின் உள்பக்கம் 88 அடி, கிழக்குப்பக்கம் 128 அடி, மேற்குப்பக்கம் 55.5 அடி. வா.சா.ஆ.4, 5, 7 கிரைய ஆவணங்களில் உள்ள சொத்தின் அளவீடுகளுக்கும் நான் சொல்லும் அளவீடுகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

5. வா.சா.ஆ.8 பத்திரிக்கை நாங்கள்தான் அச்சடித்தோம் என்றால் சரிதான். 5, 11, 12 பிரதிவாதியின் தகப்பனார் அறங்காவலராக உள்ளார் என்றால் சரிதான். 1991 லிருந்து பிரதிவாதிகள் வழக்குச்சொத்தை கிரையம் பெற்று அங்கு வசித்து வரும் விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.10 வழக்கறிஞர் அறிவிப்புக்கு முன் கோயில் இடத்தில் ஆக்கரமிப்பு உள்ளதாக இந்து சமய அறநிலையத்துறைக்கு 2014 ல் மனு கொடுத்திருந்தேன். நான் கொடுத்த வா.சா.ஆ.10 அறிவிப்பிற்கு பிரதிவாதி வா.சா.ஆ.11 பதில் அனுப்பினார்.

6. வழக்கு கோவிலை சுற்றி காம்பவுண்ட் சுவர் உள்ளது. காம்பவுண்ட் சுவரின் வடக்குப்பக்கம் பேரூராட்சியின் கழிவுநீர் கால்வாய் உள்ளது என்றால் சரிதான். கோவிலின் கிழக்குப்புறம் கடைகள் உள்ளன, அவை கோவிலுக்கு பாத்தியப்பட்டது. காம்பவுண்ட் சுவருக்கு மேற்குப்பக்கம் மஸ்தான் சாகிபு இடம் உள்ளது. கோவில் காம்பவுண்ட் சுவற்றிற்கு தெற்குப்பக்கம் பிரதிவாதிகளின் வீடு உள்ளது. நான் 14 வது

பிரதிவாதியிடம் கொடுத்த மனுவிற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. நான் கொடுத்த மனுவின்படி இடத்தை அளந்து பார்த்து ஆக்கிரமிப்பு இல்லை என்பதால்தான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

7. பிரதிவாதிகள் நீதிமன்ற உத்தரவுப்படி சொத்தை கிரையம் பெற்று 1991லிருந்து அனுபவத்தில் இருந்து வருவாய் துறை ஆவணங்களையும் அவர்கள் பெயரில் மாற்றி சட்டக்காலத்திற்கு மேலாக அனுபவம் செய்து வருவதை தெரிந்துகொண்டே இந்த வழக்கை பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு கோவில் இந்து சமய அறநிலையத்துறையின்கீழ் வருவதால் எனக்கு கோவில் சார்பாக வழக்கு தாக்கல் செய்ய உரிமையில்லை என்றால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**15 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/- M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.